# முஹம்மது நபி (ஸல்) அவர்களின் தீர்ப்பாயங்களும் காதிகளுக்குரிய பண்புகளும்- ஓர் நீதித்துறைசார் அணுகுமுறை

# PROPHET MUHAMMED'S (PBUH) JUDGEMENTS & CHARACTERISTICS OF QADI- A JUDICIAL APPROACH

**A.C.M. Aathif[1], M.M. Shiyana[1] and S.M.M. Mazahir[1]**

[1,2&3] Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka

*[1]mohammedaathif098@gmail.com*

**ABSTRACT:** *The principles of Islamic jurisprudence and its teachings on justice ensure human interests. Acting as a Qadi in Islamic judicial administration is a crucial thing. However, it is questionable how far Qadis know their standards. Therefore it is necessary to examine the basic characteristics of Qadi judges in Islamic judicial practice. This study aims to identify the characteristics of the Qadis in the judgments given by the Prophet Mohammed (PBUH), in the areas of criminal law, civil law, family law, personal morality, sociology, and Emphasizing the importance of justice in the Islamic judiciary branch. The qualitative method was employed by a literature review and bibliographic data analysis methods including secondary sources such as books, research articles, internet resources, Qur'an, and Hadith sources. Further, the research findings are presented in a descriptive method through sub-headings. According to the results, a Qadi should possess special qualities such as having knowledge of jurisprudence, fair treatment, being strict in implementing the law, protecting the rights of individuals, knowing other religious laws, Stabilizing bonds in family relations, logical clarity of ideas, giving a period of time, establishing social harmony, and protecting the human dignity. The researchers expect that this study will help the students of Islamic law, to know the quality of the Qadi judge in the field of Islamic jurisprudence, to understand the importance of justice in Islam, and to develop policies associated with the Islamic judiciary in the future.*

**திறவுச் சொற்கள்**: நீதி, நபி (ஸல்) அவர்களின் தீர்ப்புக்கள், காதியின் பண்புகள், சுன்னா, உஸ்வதுல் ஹஸனா

## 1. அறிமுகம்

இஸ்லாமிய வரலாற்றில் நீதி என்பது முக்கியத்துவம் வாய்ந்த ஓர் உயர்ந்த பண்பாக நோக்கப்படுகிறது (Jazeel & Fowzul, 2014). நீதிப் பரிபாலனத்தில் தீர்ப்பளித்தல் என்பது மிக முக்கிய செயற்பாடாகும். எனவே, நீதிபதியால் வழங்கப்படும் தீர்ப்பானது நீதமானதாகவும் பக்கசார்பற்றதாகவும் வெளிப்படையானதாகவும் காணப்படல் வேண்டும் என்பதில் இஸ்லாம் கூடுதல் கவனம் செலுத்துகிறது (Jazeel, Fowzul & Rakeeza, 2020). "நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதி அவனே" என்ற அடிப்படையில் முஸ்லிம்கள் சமூக, சமய, அரசியல், பொருளாதார மற்றும் நாளாந்த நடவடிக்கைகள் உட்பட அனைத்து துறைகளிலும் நீதியைப் பேணி நடக்க வேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிடுகிறது (Mazahir & Ismiya, 2017).

சர்வதேச சட்டமானது 'நீதிபதியொருவர் தாம் எவ்வாறு தீர்ப்பு வழங்க வேண்டுமென்று அவர் எதிர்பாக்கின்றாரோ, அவ்வாறே தமது வழக்காளிகளுக்குத் தீர்ப்பு வழங்க வேண்டுமெனக் கூறுகின்றது. ஆனால், அல்குர்ஆனின் பிரகடனமானது தீர்ப்பு உமக்கோ அல்லது உமது பெற்றோருக்கோ விரோதமாக இருந்தாலும் கூட நீதி வழங்குவதில் தவறாதீர்கள் என்பதுடன் ஒரு கூட்டத்தினர் மீதான விரோதம் கூட நீங்கள் அநீதியாகச் செயற்படுவதற்குக் காரணியாக அமைந்து விடக்கூடாது என்றும் போதிக்கிறது (Jazeel & Fowzul, 2019). இதனை பின்வரும் அல்குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகிறது. ***"மு.்.மின்களே!***

***நீங்கள் நீதியின்மீது நிலைத்திருப்பவர்களாகவும், உங்களுக்கோ அல்லது (உங்கள்) பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருப்பினும் அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாகவும் இருங்கள்"*** (அல்குர்ஆன், அந்நிஸா: 135). மேலும் பூமியில் நீதியை நடைமுறைப்படுத்த முயற்சிப்பதும் அதனை மறுப்போறுக்கும் குழப்பங்கள் ஏற்படுத்துவோருக்கும் தண்டனை அளிப்பதும் நபிமார்களின் அழைப்புப் பணியில் அடங்கியவை என இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகின்றார்கள் (Basheer, 2014).

நீதி என்பது ஒரு தனிநபரின் தெளிவான சிந்தனைக்கான உரிமை (ஹக்) ஆகும். இது ஏனைய நபர்களுடன் ஒருவர் அவரது உறவுகளை ஒழுங்குபடுத்தும் விதிகள் மற்றும் சட்டங்களைக் குறிக்கிறது. "அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த நிழலும் இல்லாத அந்நாளில் அல்லாஹ் தன் நிழலில் ஏழு வகை மனிதர்களுக்கு அடைக்கலம் கொடுப்பான். அதில் (ஒருவர்) நீதமான தலைவராக இருப்பார் (ஸஹீஹ் முஸ்லிம்). எனவே நீதியானது இம்மை மறுமை இரண்டிற்குமான நலனைப் பெற்றுத்தரும் ஓர் அம்சமாகக் காணப்படுகிறது.

இஸ்லாமிய நீதிச் செயற்பாட்டின் பண்பினைக் கூறும் இரு பதங்களாக ஹுக்ம் மற்றும் கழா ஆகியவை விளங்குகின்றன. கழா என்ற சொல் மொழி ரீதியில் சட்டமியற்றுதல், தீர்மானித்தல், முடிவெடுத்தல் போன்ற சில பொருள்களையும் பரிபாசை ரீதியில் கழா என்பது தெய்வீக வழிகாட்டுதலின் அடிப்படையில் பிணக்குகளைத் தீர்த்து வைத்தலையும் குறிக்கிறது (Jazeel & Fowzul, 2015). எனவே காதி என்ற சொல் நேரடியாக நீதிபதி என்ற பொருளைத் தருகிறது (Jazeel & Fowzul, 2018). சிவில் வழக்குகள், குற்றவியல் வழக்குகள் மற்றும் குடும்பச் சட்ட விவகாரங்கள் உட்பட நீதிமன்றங்களுக்கு முன் வரும் பல்வேறு வழக்குகளை நீதிபதிகள் முடிவு செய்கிறார்கள். சட்டத்துறையினது விதிகள் மற்றும் பயன்படுத்தக்கூடிய பிற ஆதாரங்களைக் கையாளும் விதிகளைப் பின்பற்றவும் வழக்குகள் நடத்தப்படுவதையும் நீதிபதிகள் உறுதி செய்கிறார்கள். மேலும் வழக்கில் தொடர்புடைய இருதரப்பினரும் தங்கள் வழக்கை முன்வைப்பதில் சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற முறையில் செயல்படுவதற்கும் நியாயமான வாய்ப்பைப் பெறுவதை உறுதிப்படுத்தவும் ஒரு நீதிபதி உறுதுணையாக இருப்பார்.

அந்த அடிப்படையில் நபி (ஸல்) அவர்கள் காதிகளுக்குரிய சிறந்த பண்புகளையும் நீதியை நிலைநாட்டுவதற்கான முக்கிய தந்திரோபாயங்களையும் அணுகுமுறைகளையும் கைக்கொண்டிருந்தார்கள் (Musthafa, 2014). எனவேதான் காதியாக நியமனம் பெறுபவர் சட்டம், அதன் விடயப்பரப்பு, மூல ஆவணங்கள் பற்றிய அறிவு, சிந்தனாத்திறன் உள்ளிட்ட கல்வித் தகைமையையும் உரிய வயதெல்லையையும் நேர்மை, சமத்துவம், கௌரவம், வெளிப்படைத்தன்மை ஆகிய நடத்தைகளையும் கொண்டிருக்க வேண்டும் என இஸ்லாம் விரும்புகிறது (Jazeel & Fowzul, 2014). மேலும் இஸ்லாமிய சட்டவியல் அறிஞர்களும் நீதிபதியின் ஒழுக்கவியல் நடத்தை எனப்படும் "ஆதாபுல் காழி" பற்றி விரிவாக விவாதித்துள்ளனர். சாட்சி கூற வருபவரின் நடத்தையை அவர் சாட்சியாகப் பங்குகொள்ளத் தகைமையாக கருதும் இஸ்லாம், ஒரு காதி நீதிபதியின் நடத்தை பற்றி தெளிவாக வரையறுத்திருப்பது மிகப்பொருத்தமானதாகும். எனவேதான் அத்ல் எனும் நீதமான நடத்தை நீதிபதியிடம் அமைந்திருப்பதை இஸ்லாமிய சட்டவியல் அத்தியவசியமானதாகக் கருதுகின்றது (Jazeel & Fowzul, 2014). ஏனெனில், மக்கள் தமது அன்றாட வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்குமென நீதித்துறையின் மீதே நம்பிக்கை கொண்டுள்ளனர். நீதிப் பரிபாலனத்தில் நீதியை எதிர்பார்த்து வருபவர்களுக்கு அதனை வழங்கும் போதே நீதித்துறை மீதான நம்பிக்கை வலுப்பெறும். இவ்வாறு அவர்களின் நம்பிக்கையை வலுப்பெறச் செய்வதே நீதித்துறை அலுவலர்களின் கடமையாகும். (Jazeel & Fowzul, 2019).

இலங்கை போன்ற சிறுபான்மை நாடுகளில் காதிகளின் நியாயாதிக்கம் குடும்ப சட்டங்களுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இஸ்லாமிய நாடுகளில் குற்றவியல், குடியியல், குடும்பம், தனிநபர் ஒழுக்கம், சமூகவியல் போன்ற விடயங்களில் காதிகளின் நியாயாதிக்கம் பரந்துபட்டதாகக் காணப்படும். தற்கால சூழலில் காதி நீதிமன்றங்களில் நடைபெறும் முறைகேடுகள், மக்களை அவமரியாதைக்குட்படுத்தல் போன்ற சில நிகழ்வுகள் நடைபெறுவதைக் காண முடிவதுடன் அடிப்படை உரிமையாக கருதப்படும் நீதியானது பாரபட்சமான சில தீர்ப்புகளால் சவாலுக்குட்படுவதையும் அறியமுடிகிறது. இவ்வாறான பின்னணியில் மனித குலத்திற்கு முன்மாதிரி மிக்க வாழ்க்கையை வாழ்ந்து காட்டிய நபி (ஸல்) அவர்களின் நீதித்தீர்ப்புக்களை ஆராய்வது தற்காலத்தின் தேவையாக கருதப்பட்டதாலும் ஒரு காதியிடம் இருக்க வேண்டிய பண்புகளை நபியவர்களின் முன்மாதிரிகளில் இருந்து அடையாளப்படுத்துவது வலுவாக அமையும் என்று கருதப்பட்டதாலும் இவ்வாய்வு

மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாக முஹம்மது நபி (ஸல்) அவர்கள் குற்றவியல், குடியியல், குடும்பவியல், சமூகவியல் மற்றும் தனிநபர் ஒழுக்கம் ஆகிய விடயங்களில் வழங்கிய நீதித்தீர்ப்புக்களின் ஊடாக காதி நீதிபதிகளுக்குரிய பண்புகளை அடையாளப்படுத்துவது இவ்வாய்வின் ஆய்வுப் பிரச்சினையாகவும் அவ்வாறான பகுதிகளில் நபியவர்களின் தீர்ப்புக்களை பகுப்பாய்வது ஆய்வின் எல்லையாகவும் காணப்படுகிறது.

**முன்னைய ஆய்வுகள் பற்றிய மதிப்பீடு**

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தொடர்பாக ஆராய்ந்த போது இஸ்லாமிய நீதிமன்ற முறைமை, இஸ்லாமிய தீர்ப்பளிக்கும் ஒழுங்கு, இலங்கை காழி நீதிமன்ற ஒழுங்கு போன்ற சில தலைப்புக்களில் ஆய்வுகள் இடம்பெற்றுள்ளமையைக் காணக்கிடைத்தது. எனினும் இந்த ஆய்வுத் தலைப்பினை அடிப்படையாகக் கொண்டு எவ்வித ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. 2015ஆம் ஆண்டு MIM Jazeel மற்றும் MB Fowzul ஆகியோரின் ''தீர்ப்பளிக்கும் ஒழுங்கு: ஓர் இஸ்லாமியப் பார்வை'' எனும் ஆய்வானது இஸ்லாமிய தீர்ப்பளிக்கும் ஒழுங்கினை (அதப் அல் கழா) ஆய்வு செய்யும் ஓர் விபரிப்பு ஆய்வாகும். தீர்ப்பளிக்கும் ஒழுங்கு, தீர்ப்புக்கான மூலாதாரங்கள், தீர்ப்பு மீளாய்வும் மேன்முறையீடும் என்ற தலைப்புகளின் ஊடாக ஆராயப்பட்டுள்ளது. இதில் தீர்ப்பளிக்கும் ஒழுங்கு பற்றி இஸ்லாத்தின் பார்வை பொதுவாக ஆராயப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு MIM. Jazeel, MB. Fowzul & ARF. Rakeeza ஆகியோரால் வெளியிடப்பட்ட The Judgements of Quazi Courts In Sri Lanka: An Analysis என்ற பண்புரீதியான ஆய்வானது காதி நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்படும் நடைமுறைகள், தீர்ப்புக்களை அமுலாக்கம் செய்வதில் உள்ள பிரச்சினைகள், மேன்முறையீட்டு நடைமுறைகள் என்பவற்றை ஷரீஆவின் பிரமாணங்களுடன் ஒப்பிட்டுகிறது. இது இலங்கை காதி நீதிமன்றங்களை மையப்படுத்தியுள்ளதால் நபி (ஸல்) அவர்களின் தீர்ப்புக்களின் முன்மாதிரிகள் மற்றும் அவற்றினூடாக காதிகளுக்குரிய பண்புகள் பற்றி குறிப்பிடவில்லை. 2020ஆம் ஆண்டு Mustapha Isa Qasim ஆல் வெளியிடப்பட்ட Prophet Muhammad's Strategies On Security And Peace Building: Lessons For The Nigerian Society என்ற ஆய்வானது சமூகப் பாதுகாப்பையும் சமூக ஒற்றுமையையும் கட்டியெழுப்புவதில் நபி (ஸல்) அவர்களின் தந்திரோபாயங்கள் பற்றி ஆராய்கிறது. ஹஜருல் அஸ்வத் கல்லைப் பதித்தல், மதீனாவுக்கான ஹிஜ்ரத், மதீனா சாசனம், ஹுதைபியா உடன்படிக்கையில் காணப்படும் நபி (ஸல்) அவர்களின் தந்திரோபாயங்களை அடையாளப்படுத்தி நைஜீரிய சமூகங்களுக்கான படிப்பினைகளை ஆய்வாளர் முன்வைக்கிறார். மதீனா சாசனம் நபி (ஸல்) அவர்களின் யாப்புச் சட்டங்களுக்கு முன்னுதாரணமாகக் கூறப்படுவதால் அதிலுள்ள தரவுகள் இலக்கிய மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

2018ஆம் ஆண்டு MIM Jazeel மற்றும் MB Fowzul ஆகியோல் வெளியிடப்பட்ட இலங்கையில் காழிகளின் தகைமைகள்: இஸ்லாமிய, கள அனுபவப் பகுப்பாய்வு என்ற ஆய்வானது பண்புசார் மற்றும் அளவுசார் அடிப்படையில் இலங்கையை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். இஸ்லாம் விதந்தரைக்கும் சட்டம், அதன் விடயப்பரப்பு, மூல ஆவணங்கள் பற்றிய அறிவு மற்றும் சிந்தனாத் திறன் உள்ளிட்ட கல்வித் தகைமைகளை இலங்கை காழிகளிடம் இல்லை என்பதும் பெண்கள் காழிகளாக செயற்படும் விடயத்தில் இஸ்லாமிய சட்டத்தினதும் முஸ்லிம்களதும் ஒப்புதல் இன்மை காணப்படுகிறது என்பதும் இவ்வாய்வின் கண்டறிதல்களாகும். எனினும் தற்போதைய ஆய்வானது காதிகள் எவ்வாறான பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பதையும் நீதியினது முக்கியத்துவத்தையும் ஆராய்கிறது.

இலங்கையில் நியமனம் பெறும் காழிகளின் நடத்தைகள்: ஓர் இஸ்லாமிய. கள அனுபவப் பகுப்பாய்வு என்ற தலைப்பில் MIM Jazeel மற்றும் MB Fowzul ஆகியோல் 2019ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆய்வானது இலங்கையிலுள்ள காதிகளின் நடத்தையை மதீப்பீடு செய்கிறது. அதனடிப்படையில் பெண் வழக்காளிகளை பாரபட்சமாக நடாத்துதல், அன்பளிப்புகளை ஏற்றல் போன்ற சில காதிகளின் நடத்தை குறித்த குறைகூறல்கள் உள்ள போதிலும் அவர்களின் நல்லொழுக்கம், நடுநிலைமை, சமமாக நடாத்துதல் என்பன தொடர்பில் பொதுவான சிறந்த மதிப்பீடு உள்ளது என்பது அவ்வாய்வின் முடிவாகும். எனினும் தற்போதைய ஆய்வானது நியமனம் பெற்ற காதிகளின் பண்புகளை மதிப்பீடு செய்வதைத் தவிர்த்து நியமனம் பெறும் காதிகளிடம் எவ்வாறான பண்புகள் காணப்பட வேண்டும் என்பதை அடையாளப்படுத்துவதை நோக்கக் கொண்டுள்ளது. 1986ஆம் ஆண்டு Yoshiko Oda ஆல் வெளியிடப்பட்ட Muhammad As The Judge: An Examination Of The Specific Quality Of Muhammad's Charismatic Authority என்ற ஆய்வானது அல்குர்ஆனை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமிய

அரசில் நபி (ஸல்) அவர்களின் பங்கு (Role) அதிகாரம் (Authority) மற்றும் நிலை (Position) என்பவற்றையும் மதீனாவின் நீதிபதி என்ற வகையில் நபியவர்களின் குறிப்பிட்ட அதிகாரங்கள் பற்றியும் விவரிக்கிறது. இவ்வாய்வானது ஒரு நீதிபதியாக நபி (ஸல்) அவர்களின் அதிகாரங்களை அல்குர்ஆனின் துணையுடன் விபரிக்கிறதே தவிர நபி (ஸல்) அவர்களின் தீர்ப்பாயங்களையும் அவற்றிலுள்ள காதிகளுக்குரிய பண்புகளையும் பகுப்பாயவில்லை. தற்போதைய ஆய்வானது நபியவர்களின் தீர்ப்பாயங்களின் ஊடாக காதிகளின் பண்புகளை இனங்காண்பதையும் நீதியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

இவ்வாய்வானது பின்வரும் ஆய்வு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நீதித்துறையில் நீதியின் முக்கியத்துவத்தை இனங்காணல்.
- நபி (ஸல்) அவர்களின் தீர்ப்புக்களில் இருந்து காதிகளுக்குரிய பண்புகளை அடையாளப்படுத்தல்.

## 2. ஆய்வு முறையியல்

பண்பு ரீதியாக மேற்கோள்ளப்பட்ட இவ்வாய்வானது நூலகத் தரவுப்பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டது. ஆய்விற்குரிய தரவுகள் இரண்டாம் நிலை மூலங்களான இஸ்லாமிய நீதித்துறை சார் ஆய்வுக் கட்டுரைகள், இணைய ஆக்கங்கள், ஹதீஸ் மற்றும் அல்குர்ஆன் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டு அவை மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு ஆய்வுப் பெறுபேறுகள் விபரிப்பு முறையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 3. பெறுபேறுகளும் கலந்துடையாடலும்

### a. குற்றவியல் சட்டம்

குற்றவியல் சட்டமென்பது தண்டனை சட்டகோவையில் வரையறுக்கப்பட்ட குற்றவியல் குற்றங்களை செய்த ஒருவருக்கு அக்குறித்த சட்டக்கோவையில் குறிப்பிடப்பட்டிருக்கும் தண்டனையை நீதிமன்றங்களினூடாக வழங்குதல் ஆகும். இது பொதுமக்கள், சமுதாயம், அரசாங்கம் போன்றவற்றுக்கு எதிராகவும் செயற்படுகின்ற குற்றமாகவும் கருதப்படுகின்றது (Ayoob, 2019). உதாரணமாக கொலை, கொள்ளை, திருட்டு, கற்பழிப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம். குற்றவியல் சட்டங்களின் மூலம் வழங்கப்படும் தண்டனைகளானது பொதுமக்களையும் சமுதாயத்தையும் அரசாங்கத்தையும் பாதுகாக்கக்கூடியனவாக இருக்கும். சில வேளை அது மரண தண்டனையாகவோ அல்லது ஆயுள் சிறைத் தண்டனையாகவோ இருக்கலாம்.

அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு முறை நபி (ஸல்) அவர்களிடம் திருமணம் செய்து விபச்சாரம் செய்த யூத ஆண் மற்றும் பெண் விசாரணைக்காக ஆஜர்படுத்தப்பட்டார்கள். விசாரணையின் முடிவில் விபச்சாரம் செய்தது உறுதியானது. இஸ்லாமிய குற்றவில் சட்டத்தின் படி குற்றவாளிகளுக்கு ரஜ்முடைய தண்டனை வழங்கப்பட வேண்டும். ஆனாலும் நபி (ஸல்) அவர்கள் குறித்த குற்றவாளிகளுக்கு இஸ்லாமிய குற்றவியல் சட்டத்தின் தண்டனையை நிறைவேற்றவில்லை. எனினும் அவர்கள், குற்றவாளிகள் யூத சமயத்தை சேர்ந்தவர்கள் என்பதால் யூத சமயத்தின் தௌராத் வேதத்தில் குறித்த குற்றத்துக்கு என்ன தண்டனை கூறப்பட்டிருக்கிறது என்பதை குற்றவாளிகள் முன்னிலையில் மற்றொரு யூதனிடம் கேட்டு அதற்குரிய தண்டனையை உறுதிப்படுத்தினார்கள். அதாவது திருமணமானவர்கள் விபச்சாரம் செய்தால் அவர்களுக்கு ரஜ்முடைய தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்ற சட்டம் தௌராத் வேதத்திலும் கூறப்பட்டிருந்தது. அவ்விரு குற்றவாளிக்கும் அவர்களின் சமயத்தின் பிரகாரமே நபி (ஸல்) அவர்கள் நீதியாக தீர்ப்பு வழங்கினார்கள் (ஹதீஸ், புகாரி: 6841).

மேற்குறித்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் வழங்கிய தீர்ப்பு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பானது பிறசமூகத்தவர்களின் வேதநூலில் கூறப்பட்ட தண்டனைகள் பற்றிய அறிவு நபி (ஸல்) அவர்களிடம் காணப்பட்டதுடன் அதன் அடிப்படைடையிலேயே தீர்ப்பும் வழங்கினார்கள். எனவே, தீர்ப்பு வழங்குவதில் பாலின, இன ரீதியில் யாரும் அநீதியான முறைக்கு உட்படுத்தபடவுமில்லை. முஸ்லிமல்லாத ஏனைய குடிமக்கள் இஸ்லாமிய சட்டத்தின் பிரகாரம் தண்டணையை ஏற்க

கட்டாயப்படுத்தப்படவுமில்லை. எனவே, ஒரு காதி இஸ்லாமிய சட்டங்களை மாத்திரம் அறிந்திருக்காது பிற சமயங்களினது சட்டங்களையும் பொதுச் சட்டங்களையும் அறிந்திருக்க வேண்டும் என்பதை மேற்குறித்த தீர்ப்பு எடுத்துக்காட்டுகிறது. ஏனெனில் காதியிடம் தீர்ப்பு வேண்டி முஸ்லிம் அல்லாதவர்களும் சில போது வரலாம். அவர்களுக்கு இஸ்லாமிய ஷரீஆவின் பிரகாரம் தீர்ப்புச் செய்தால் சிலவேளை ஏற்றுக் கொள்ளவும் செய்யலாம் அல்லது அதனை மறுக்கவும் செய்யலாம். எனினும் அவர்களின் சமயத்தின் படி தீர்ப்புக் கூறினால் அதை அவர்களால் மறுக்க முடியாது.

ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ''மக்ஸூமி'' குலத்தைச் சேர்ந்த ஒரு பெண் திருடிவிட்டாள் என்ற செய்தி குறைஷியருக்குக் கவலையளித்தது. அப்போது அவர்கள் ''நபி (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமான உஸாமாவைத் தவிர வேறு யார் துணிந்து (அந்தப் பெண்ணுக்காகப் பரிந்து) பேச முடியும்?'' என்றார்கள். அவ்வாறே உஸாமா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அன்னவர்களிடம் (பரிந்து) பேசினார்கள். அப்போது நபி (ஸல்) அன்னவர்கள், ''அல்லாஹ்வின் தண்டனைகளில் ஒன்றின் விடயத்திலா (அதை நிறைவேற்றாமல்விட்டுவிடுமாறு) நீங்கள் பரிந்துரைக்கிறீர்?'' என்று கேட்டுவிட்டுப் பிறகு எழுந்து நின்று (பின்வருமாறு) உரையாற்றினார்கள்: மக்களே! உங்களுக்கு முன்னால் வாழ்ந்த (பனூ இஸ்ராயீல்) மக்கள் வழிகெட்டுப் போனதற்குக் காரணமே, (அவர்களிடையே உள்ள) உயர் குலத்தார் குற்றம் செய்தால் அவர்கள் அவரை (தண்டிக்காமல்) விட்டு விடுவார்கள். அவர்களிலுள்ள பலவீனர்கள் குற்றம் செய்தால் அவர்களின் மீது தண்டனையை நடைமுறைப்படுத்துவார்கள். அல்லாஹ்வின் மீதாணையாக! எனது மகள் குற்றம் செய்தாலும் அக்குற்றத்துக்குரிய தண்டனையை வழங்குவேன் (ஹதீஸ், புகாரி: 6788).

மேற்குறித்த தீர்ப்பு பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளன. அதாவது காதி எப்போதும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் கடுமையானவராக இருத்தல் அவசியாகும் என்பதை காதிக்கு இருக்க வேண்டிய பண்பாக விளங்கலாம். சமூக அந்தஸ்து மிக்க உயர் குல மக்கள் குற்றங்கள் செய்தால் அதற்காக பரிந்துரை செய்ய காதிக்கு நெருக்கமானவர்கள் வரலாம். காதிக்கு அன்பளிப்புகளையோ இலஞ்சம் கொடுக்க முனையலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் யார் குற்றவாளியோ அவர்ளுக்குரிய தண்டனையை நிறைவேற்றும் விடயத்தில் காதி கடுமையானவராக இருக்க வேண்டும். மேலும் நீதியை கடைபிடிப்பதில் உறவுமுறை குறுக்கிடாது என்பதை நபியவர்கள் வெளிப்படுத்தினார்கள். எனவே, நீதியை வழங்குவதில் பக்கச்சாற்பற்று இருத்தல் காதிக்குரிய மிக முக்கிய உயர் பண்பாக இருக்கிறது. மனிதனால் இயற்றப்பட்ட சட்டங்கள் ''நீதிபதியொருவர் தான் எவ்வாறு தீர்ப்பு வழங்க வேண்டுமென்று அவர் எதிர்பாக்கின்றாரோ, அவ்வாறே வழக்காளிகளுக்குத் தீர்ப்பு வழங்கலாம்'' எனக் கூறுகின்றது. ஆனால், இஸ்லாம் நீங்கள் செய்யும் தீர்ப்பு உங்களுக்கோ அல்லது உங்களுடைய நெருங்கிய உறவினர்களுக்கோ எதிரானதாக இருந்தாலும் கூட நீதி நிலை நாட்டப்படி வேண்டும் என்று கூறுகிறது. தனது கோத்திரத்தவன், தனக்கு நெருக்கமானவன் என்பதற்காக அவனது அநீதியையும் பொருட்படுத்தாது, அவனுக்கு சார்பாகவே செயற்படுவது 'அறியாமையின் பண்பு' என்று நபி (ஸல்) அவர்கள் கண்டித்துள்ளார்கள் (Jazeel & Fowzul, 2019).

நபி (ஸல்) அவர்களின் கூற்றுப்படி, எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான், ''என் அடியார்களே, எனக்கு அநீதி இழைப்பதை நான் தடை செய்து கொண்டேன், உங்களுக்கும் அதைத் தடை செய்தேன். எனவே ஒருவருக்கு ஒருவர் அநீதி இழைப்பதைத் தவிர்க்கவும்'' (ஸஹீஹ் முஸ்லிம்). எனவே இஸ்லாமிய நீதித்துறைப் பகுதியில் நீதமாக நடப்பது பாரிய கடமையும் பொறுப்புமாகும்.

குற்றவியல் சட்டங்களில் நீதி நிலைநாட்டப்படாவிடின் அச்சமூகத்தில் கொலை, கொள்ளை, விபச்சாரம், திருட்டு போன்ற குற்றவியல் குற்றங்கள் மலிந்து விடுகின்றன. இதனால் சமூக ஒற்றுமை சீர்குழைந்து தனிமனித வாழ்வும் பாதிப்புக்குள்ளாகிறது. எனவே தான் நீதியை நிலைநாட்டும் விடயத்தில் காதி கடுமையானவராகவும் குற்றவாளிகளின் சமயத்துக்கு ஏற்ப தண்டனைகளை வழங்கும் போதும் அச் சமூகம் குற்றமற்ற உயர் விழுமியங்கள் கொண்ட சமூகமாக மாறும். இவ்வாறான சமூகத்தை உருவாக்குவதே நீதித்துறையின் இலக்காகக் கூட உள்ளது.

b. **குடியியல் சட்டம்**

குடியியல் சட்டமானது தனிமனிதனுக்கு அல்லது தனியார் நிறுவனங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை ஆராய்கிறது. அவதூறு, ஒப்பந்தத்தை மீறுதல், காயம் அல்லது மரணத்தை தோற்றுவிக்கும் படியான அலட்சியம், சொத்து சேதம் என்பன குடியியல் குற்றங்களாகும் (Ayoob, 2019).

அனஸ் இப்னு மாலிக் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு கிராமவாசி பள்ளிவாசலின் ஒரு பகுதியில் சிறுநீர் கழித்தார். அப்போது அவரை மக்கள் விரட்டினார்கள். (இதைக் கண்ட) நபி (ஸல்) அவர்கள், அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள். அம்மனிதர் சிறுநீர் கழித்து முடித்த பின்னர், ஒரு வாளியில் தண்ணீர் கொண்டு வரக் கட்டளையிட்டார்கள். அது சிறுநீரின் மீது ஊற்றப்பட்டது. பின்னர் நபி (ஸல்) அவர்கள் அந்த கிராமவாசிக்கு ‘‘உண்மையில் இந்தப் பள்ளிவாசல்கள் சிறுநீர் கழிப்பதற்கோ அசுத்தங்கள் போடப்படுவதற்கோ உரிய இடமன்று. ஏனெனில் நிச்சியமாக பள்ளிவாசல்கள் அல்லாஹ்வை நினைகூர்வதற்கும் அல்குர்ஆன் ஓதப்படுவதற்குமுரிய இடமாகும்’’ என்று கூறினார்கள். (ஹதீஸ், முஸ்லிம்: 427).

பள்ளிவாயலில் சிறுநீர் கழிப்பது என்பது சிவில் குற்றமாகும். மேலும் ஒழுக்க நெறிமுறைகளுக்கு முற்றிலும் மாற்றமான செயலாகும். இதனால் தான் மேற்கூறிய ஹதீஸில் சிறுநீர் கழித்த அந்த மனிதருக்கு தகுந்த பாடம் புகட்ட (அடிக்க) ஸஹாபாக்கள் முற்பட்டார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு அந்த கிராமவாசிக்கு தண்டனை வழங்கியிருக்கலாம். ஸஹாபாக்களுக்கு அடிக்க அனுமதித்தும் இருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அடிக்க முற்பட்ட ஸஹாபாக்களையும் தடுத்தார்கள். ஒரு மனிதன் சிறு நீர் கழிக்கும் போது இடையில் நிறுத்துவது பாரிய வேதனையாகும். இதனால் தான் நபி (ஸல்) அன்னவர்கள் அந்த கிராமவாசியை சிறு நீர் கழித்து முடியும் வரை விட்டு விடுங்கள் என்றார்கள். சிறு நீர் கழித்ததன் பின்னர் கூட நபி (ஸல்) அவர்கள் அந்த மனிதருக்கு தண்டனைகள் ஏதும் வழங்கவில்லை. ஏனெனில் அந்த கிராமவாசி நாகரீகம் தெரியாத ஒருவராக இருக்கலாம். இதனால் அவருக்கு தெரியாத விடயத்தில் செய்த குற்றத்துக்கு தண்டனை வழங்கி அவரை சங்கடத்துக்கு ஆளாக்குவதை விட குறித்த விடயம் பற்றிய ஒழுங்குகளைக் கற்றுக் கொடுப்பது சிறந்ததாகும். எனவே தான் நபி (ஸல்) அவர்கள் அந்த கிராமவாசிக்கு அன்பாக பள்ளிவாயலின் ஒழுங்குகளைக் கற்றுக்கொடுத்தார்கள்.

ஒரு காதி தீர்ப்பளிக்கும் போது குற்றாவளி அறியாமல் செய்த குற்றத்துக்கு தண்டனைகள் வழங்குவதை விட அவருக்கு அந்த விடயத்தைக் கற்றுக்கொடுப்பது சிறந்ததாகும். மேலும் குற்றமிழைத்தவருடன் சமூகம் கடுமையாக நடக்க முற்படும் போது காதி அதை தடுத்து நிறுத்தி அவருடன் நளினமாக நடப்பது முக்கியமாகும் என்பது மேற்கூறிய தீர்ப்பின் மூலம் தெளிவாகிறது.

உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹிஜ்ரத் பயணத்தின் போது நபி (ஸல்) அவர்கள் குபாவில் தங்கினார்கள். அங்கே ஒரு பள்ளிவாயலையும் கட்டினார்கள். அந்த பள்ளிவாயலைக் கட்டும் போது அப்பள்ளியின் அருகில் இருந்த யூதப் பெண்ணின் வீட்டின் கதவை உடைக்க வேண்டிய தேவை ஏற்படவே அதை உடைத்து விட்டு பள்ளியைக் கட்டினார்கள். அப்போது குறித்த யூதப் பெண் நபி (ஸல்) அவர்களிடம் முறையிடவே பள்ளியின் குறித்த பகுதியை உடைத்து விட்டு யூதப் பெண்ணின் கதவை நிர்மாணித்துக் கொடுக்குமாறு கட்டளையிட்டார்கள் (ஹதீஸ், பைஹகி: 987).

பள்ளிவாயல் கட்டுவது என்பது ஒரு சிறந்த செயலாகும். அதற்காக தனிமனிதர்களின் உடைமைகளுக்கு சேதம் விளைவிப்பது குற்றமாகும். மேலும் தனிமனிதர்களின் உரிமையை பாதுகாப்பது ஒரு காதியின் பொறுப்பாகும். ஆதலால் தான் நபி (ஸல்) அவர்கள் குறித்த பெண்ணின் வீட்டின் கதவை புணர் நிர்மாணம் செய்து கொடுக்குமாறு கட்டளையிட்டார்கள். மேற்குறித்த தீர்ப்பின் மூலம் தனி மனிதர்களின் உரிமையை உறுதி செய்து அவர்களின் உரிமையை மீட்டுக் கொடுப்பது எவ்வளவு முக்கியம் என்பதை நபி (ஸல்) அவர்கள் உணர்த்தினார்கள். ஆகவே மனித உரிமையை பாதுகாத்தல் எனும் பண்பு ஒவ்வொரு காதிக்கும் கட்டாயம் இருக்க வேண்டும். எனவே ஒரு சிவில் வழக்கை விசாரிக்கும் நீதிபதியாக, நபியவர்கள் பெரும்பாலும், வழக்கு குறித்து தாங்களாகவே உண்மைகளைக் கேட்டுக் கண்டறிந்து பொருத்தமான சட்டத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அவற்றுக்கான தீர்ப்பை வழங்குவார்கள்.

### c. குடும்ப சட்டம்

குடும்ப சட்டமென்பது திருமணம், விவாகரத்து, குழந்தைகளை பராமரித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய குடும்ப உறவுகளை வலுப்படுத்தும் சட்ட அமைப்பாகும் (Baxter, 2022). குடும்ப சட்டங்களின் பிரதான நோக்கம் குடும்ப உறவுகளுக்கிடையில் பிணைப்பை ஏற்படுத்துவதாகும்.

அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கிராமவாசி ஒருவர் வந்து ‘‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! (வெள்ளை நிறமுடைய எனக்கு) என் மனைவி

கறுப்பான ஆண் குழந்தையொன்றை பெற்றெடுத்துள்ளாள். (அக்குழந்தை எப்படி எனக்குப் பிறந்தவனாக இருக்க முடியும்?)'' என்று (சாடையாகக்) கேட்டதற்கு நபி (ஸல்) அவர்கள் ''உன்னிடம் ஒட்டகம் ஏதேனும் உள்ளதா?'' என்று கேட்டார்கள். அதற்கவர், ''ஆம்'' என்றார். ''அவற்றின் நிறம் என்ன?'' என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர் ''சிவப்பு'' என்று பதிலளித்தார். நபி (ஸல்) அவர்கள், ''உன் ஒட்டகங்களுக்கிடையே சாம்பல் நிற ஒட்டகம் இருக்கின்றதா?'' என்று கேட்டார்கள். அவர் ''ஆம்'' என்றார். நபி (ஸல்) அவர்கள், ''(தன்னுடைய தாயிடம் இல்லாத) அந்த நிறம் அதற்கு மட்டும் எவ்வாறு வந்தது?'' என்று கேட்டார்கள். அவர், ''அதன் (தந்தையான) ஆண் ஒட்டகத்தின் பரம்பரையிலிருந்து வந்திருக்கலாம் என கருதுகிறேன்'' என்று பதிலளித்தார். நபி (ஸல்) அவர்கள், ''உன்னுடைய இந்த மகனும் உன் பரம்பரையிலுள்ள (மூதாதையரின்) நிறத்தினைக் கொண்டிருக்கக்கூடும்'' என்றார்கள் (ஹதீஸ், புகாரி: 6847).

நபி (ஸல்) அவர்கள் அந்த முறைப்பாடு கிடைத்த உடன் குறித்த கிராமவாசியின் மனைவியையும் அழைத்து ''உமது கணவரின் முறைப்பாட்டிற்கு அமைய விசாரணை செய்கிறோம். தந்தையின் நிறத்தில் இல்லாத அந்தக் குழந்தை எப்படிப் பிறந்தது?'' என்றெல்லாம் விசாரணை செய்யவில்லை. அவ்வாறு அழைத்து விசாரணை செய்து, அக்குழந்தை அவ்விருவருக்கும் பிறந்த குழந்தை என்று தீர்ப்பளிக்கப்பட்டாலும் அக்கிராமவாசிக்கும் அவரின் மனைவிக்கும் இடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தி குடும்ப வாழ்க்கையிலுள்ள நிம்மதியை சீர்கெடுத்து விடும். அதனால் விவாகரத்துக் கூட நிகழலாம். எனவே, ஒரு காதி கணவன் - மனைவிக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளின் போது அவர்களுக்கிடையில் இணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். வீண்சந்தேகங்களை அதிகரிக்கும் வகையிலோ, பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும் வகையிலோ தீர்ப்பு வழங்கக் கூடாது.

விசாரணை என்ற பெயரில் அவர்களுக்கிடையில் பிணக்கை ஏற்படுத்தக் கூடாது. மேலும் ஒரு காதியிடம் ஒரு முறைப்பாடு செய்யப்படும் போது உடனடியாக விசாரணைக்காக இரு தரப்பையும் அழைத்து மேலும் பிரச்சினையை அதிகரித்துவிடக் கூடாது. ஆரம்பாக முறைப்பாட்டின் தரத்தைப் பார்க்க வேண்டும். அது உறுதியான முறைப்பாடா அல்லது சந்தேகத்தின் பேரில் அமைந்த முறைப்பாடா என்று ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். சந்தேகத்தின் பேரிலான முறைப்பாடு என்றால் குறித்த முறைப்பாட்டாளரின் சந்தேகத்தை நிவர்த்தி செய்ய வேண்டும். இதனால் குறித்த முறைப்பாட்டாளரின் சந்தேகமும் நீங்கி முறைப்பாட்டுக்கு தகுந்த தீர்ப்பையும் பெறுவார்.

மேற்குறித்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் தீர்ப்பு இதனை தெளிவாகக் காட்டுகிறது. மேலும் குறித்த நபரின் சந்தேகத்தை நீக்க நடைமுறை உதாரணம் ஒன்றை தர்க்க ரீதியில் எடுத்துக் கூறினார்கள். இதனால் மிக எளிய முறையில் குடும்பத்தில் ஏற்பட இருந்த பிரச்சினை தவிர்க்கப்பட்டது. எனவே, தர்க்க ரீதியிலான சிந்தனைத் தெளிவும் பிரச்சினையை நிதானமாக அணுகும் முறையும் காதிக்கு இருக்க வேண்டிய சிறந்த பண்புகளாகும். அவ்வாறே இறைவனின் பண்புக்கூறுகளும் நீதியுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளமையால் ஒரு குறிப்பிட்ட விடயத்தில் சந்தேகம் நீங்கி வெளிப்படையாகவே அனைவருக்கும் நீதி வழங்குவது முக்கியமாகும்.

ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: (ஒரு முறை) ஹிந்த் பின்த் உத்பா (ரழி) அவர்கள், நபி (ஸல்) அவர்களிடம் ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! (என் கணவர்) அபூ சு∴ப்யான் உலோபியான ஒருவர். எனக்கும் என் குழந்தைக்கும் போதுமான (பணத்)தை அவர் தருவதில்லை. நான் அவரிடமிருந்து அவருக்குத் தெரியாமல் எடுத்துக் கொண்டதைத் தவிர (போதுமான தொகையை அவராகத் தரமாட்டார்)'' என்று கூறினார். நபி (ஸல்) அவர்கள், ''உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் போதுமானதை நியாயமான அளவுக்கு நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்!'' என்று கூறினார்கள் (புகாரி, 5364). ஒருவர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளின் விவகாரங்களில் நீதியாக நடந்து கொள்வது அவரது கடமையாகும். ஒவ்வொருவரும் அவர்களின் பொறுப்புகள் குறித்து விசாரிக்கப்படுவர்.

ஓர் ஆணைப் பொறுத்தவரையில் மனைவிக்கும் பிள்ளைகளுக்குமான உணவு உடை உட்பட அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்து கொடுப்பது அவனது கடமை. ஆயினும் சில ஆண்கள் இதனை சரியாக நிறைவேற்றுவதில் தவறி விடுகின்றனர். (Nisfa, 2021). ஒரு கணவன் பொறுப்பற்ற முறையில் தன் மனைவிக்கும் பிள்ளைகளுக்குரிய செலவுகளை கொடுக்க மறுக்கும் போது விவாகரத்துக்கள் அதிகரிக்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இதனால் குறித்த பெண்ணும் விவாகரத்துப்

பெற்ற பிள்ளைகளும் பாரியளவில் பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள் (Zamha, Thariq & Rumana, 2017). இந்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள், அவளுக்கும் அவளது பிள்ளைகளின் செலவுகளுக்கும் கணவரின் பணத்தில் இருந்து தேவையான அளவை மாத்திரம் எடுக்க அனுமதியளித்தார்கள். ஆகவே, ஒரு காதி கணவன் - மனைவிக்கு இடையில் ஏற்படும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு சுமூகமான முறையில் தீர்வுகளைக் காண்பதுடன் அவர்களுடைய வாழ்வாதார உரிமையையும் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

### d. தனிமனித ஒழுக்கம்

இஸ்லாம் மார்க்கம் ஒவ்வொரு தனிமனிதனது ஒழுக்கத்திலும் கூடுதல் கரிசனை செலுத்துகிறது. ஏனெனில் சமூகத்தில் இருக்கும் ஒவ்வொரு தனி நபரும் ஓழக்கத்தை சரியாக கடைபிடிக்கும் போது நாளடைவில் அந்த சமூகம் செழுமையானதாகவும் உயர் நாகரீக விழுமியங்களைக் கொண்டதாகவும் மாறும். அபூ உமாமா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு இளைஞர் நபியவர்களிடம் வந்து, ‘‘அல்லாஹ்வின் தூதரே! விபச்சாரம் செய்ய எனக்கு அனுமதி தாருங்கள்’’ என்று கேட்டார். உடனே மக்கள் கூட்டம் அவரை முன்னோக்கி வந்து, ‘‘நிறுத்து! நிறுத்து!’’ என அவரைத் தடுத்தார்கள். நபியவர்கள் அவரை நெருங்கி வா என அழைக்க அவர் நெருங்கி வந்து அமர்ந்து கொண்டார். அப்போது நபி (ஸல்) அவர்கள், ‘‘இதை உன் தாய்க்கு விரும்புவாயா?’’ என்று கேட்க அவரோ, ‘‘அல்லாஹ் என்னைத் தங்களுக்கு அர்ப்பணமாக்கட்டும். அல்லாஹ்வின் மீதாணையாக, நான் அவ்வாறு விரும்ப மாட்டேன். மக்களும் தம் தாய்க்கு இதை விரும்ப மாட்டார்கள்’’ என்றார். ‘‘உன் மகளுக்கு இதை விரும்புவாயா?’’ என்று கேட்க, ‘‘அல்லாஹ் என்னைத் தங்களுக்கு அர்ப்பணமாக்கட்டும். அல்லாஹ்வின் மீதாணையாக, நான் அவ்வாறு விரும்ப மாட்டேன். மக்களும் தம் மகள்களுக்கு இதை விரும்ப மாட்டார்கள்’’ என்றார். ‘‘உன் சகோதரிக்கு இதை விரும்புவாயா?’’ என்று கேட்ட போது, அல்லாஹ்வின் மீதாணையாக, நான் அவ்வாறு விரும்ப மாட்டேன் மக்களும் தம் சகோதரிகளுக்கு இதை விரும்ப மாட்டார்கள்’’ என்றார். ‘‘உன் தந்தையின் சகோதரிகளுக்கு இதை விரும்புவாயா?’’ என்ற போது, அல்லாஹ்வின் மீதாணையாக, நான் அவ்வாறு விரும்ப மாட்டேன். மக்களும் தம் தந்தையின் சகோதரிகளுக்கு இதை விரும்ப மாட்டார்கள்’’ என்றார். ‘‘உன் தாயின் சகோதரிகளுக்கு இதை விரும்புவாயா?’’ என்ற போது அல்லாஹ் என்னைத் தங்களுக்கு அர்ப்பணமாக்கட்டும். அல்லாஹ்வின் மீதாணையாக, அவ்வாறு நான் விரும்ப மாட்டேன். மக்களும் தம் தாயின் சகோதரிகளுக்கு இதை விரும்ப மாட்டார்கள்’’ என்றார். அப்போது நபி (ஸல்) அன்னவர்கள் தமது கரத்தை அவர் மீது வைத்து, ‘‘இறைவா! இவரது பாவத்தை மன்னிப்பாயாக! இவரது உள்ளத்தை பரிசுத்தப்படுத்துவாயாக! இவரது கற்பைப் பாதுகாப்பாயாக!’’ என்று அவருக்காகப் பிரார்த்தனை செய்தார்கள் (அஹ்மத், 22211).

விபச்சாரம் இஸ்லாத்தில் குற்றவியல் ரீதியான குற்றமாகும். இதனால் சமூகக் கட்டமைப்பு சிதைவடைவதோடு குடும்பக் கட்டமைப்பும் சின்னாபின்னமாகிறது. மேலும் தனிநபர் ஒழுக்கத்தை இல்லாமல் ஆக்கும் ஒரு செயற்பாடாகவும் காணப்படுகிறது. இஸ்லாத்தில் விபச்சாரம் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை அறிந்தும் பிரத்தியேகமான அனுமதியைப் பெற மேற்குறித்த இளைஞர் முயற்சிக்கிறார். இதனால் அங்கிருந்த மக்கள் அவரை சூழ்ந்த போது நபி (ஸல்) அன்னவர்கள் அவரை அன்பாக தம்மருகில் அழைத்து அமர வைத்தார்கள். மேலும் குறித்த இளைஞருக்கு அல்லாஹ் விபச்சாரத்தை தடை செய்துள்ளான், அது இஸ்லாத்தில் கூடாத செயல் என்று கூறாமல் இதே அனுமதியை உன் தாய்க்கும் வழங்கலாமா? உன் மகளுக்கும் வழங்கி விடவா? உன் சகோதரிகள், பெண் பிள்ளைகள் அவர்களுக்கும் விபச்சாரம் செய்ய அனுமதி வழங்கப்படுவதை விரும்புவாயா? என்று கேட்டு இது தவறான சிந்தனை என்பதை அவருக்குப் புரியும் படி உணர்த்தி விடுகின்றார்கள்.

அத்துடன் அவருக்காகப் பாவமன்னிப்புக் கோரி பிரார்த்தனை புரிகிறார்கள். இந்தத் தவறான சிந்தனைக்கு உள்ளத்தில் ஏற்பட்ட கோளாறே காரணம் என்பதால் அவரது உள்ளத்தின் பரிசுத்தத் தன்மைக்கு அல்லாஹ்விடம் துஆ செய்கிறார்கள். அவரது கற்பு பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் துஆ செய்கிறார்கள். இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய அணுகுமுறையால் மற்றவர்களின் மனதைக் கவர்ந்து தனிநபர் ஒழுக்கத்தைப் பாதுகாத்தார்கள். ஒரு காதி குறித்த ஒரு விடயத்தில் தீர்ப்புக் கூற முற்படும் போது அந்தத் தீர்ப்பை மக்கள் மீது திணிக்காமல் தர்க்க ரீதியாக சிந்தனை செய்து அந்தத் தீர்ப்பின் நீதத்தை மக்களுக்கு தர்க்க ரீதியாக உணர்த்த வேண்டும். அப்போது அந்த தீர்ப்பு அதன் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும்.

புரைதா பின் அல் ஹஸீப் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ‘‘காமிதிய்யா’’ குலத்தைச் சேர்ந்த ஒரு பெண் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, ‘‘அல்லாஹ்வின் தூதரே! நான் விபச்சாரம்

செய்துவிட்டேன். (உரிய தண்டனையை நிறைவேற்றி) என்னைத் தூய்மைப்படுத்துங்கள்'' என்று கூறினார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அப்பெண்ணை திருப்பியனுப்பிவிட்டார்கள். அப்பெண் மறு நாள் (வந்து), ''அல்லாஹ்வின் தூதரே! ஏன் என்னைத் திருப்பியனுப்புகிறீர்கள்? மாஇஸ் அவர்களைத் திருப்பி அனுப்பியதைப் போன்று என்னையும் தாங்கள் திருப்பியனுப்புகிறீர்கள் போலும். அல்லாஹ்வின் மீதாணையாக! நான் (தகாத உறவில் ஈடுபட்டு) கர்ப்பமுற்றுள்ளேன்'' என்று கூறினார். நபி (ஸல்) அவர்கள், ''இல்லை, நீ சென்று குழந்தை பெற்றெடு (பிறகு திரும்பி வா)'' என்று சொன்னார்கள். குழந்தை பெற்றெடுத்த பின் அந்தப் பெண் தன் குழந்தையை எடுத்து வந்து, ''இது நான் பெற்றெடுத்த குழந்தை'' என்று கூறினார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், ''நீ சென்று குழந்தைக்குப் பாலூட்டு! பால்குடி மறந்த பின் திரும்பி வா'' என்றார்கள். பால்குடி மறக்கடித்த பின் அப்பெண் அச்சிறுவனுடன் வந்தார். அவனது கையில் ரொட்டித் துண்டு ஒன்று இருந்தது. அப்பெண், ''அல்லாஹ்வின் தூதரே! இவனுக்குப் பால்குடி மறக்கடித்து விட்டேன். இப்போது உணவு உட்கொள்கிறான்'' என்று கூறினார். நபி (ஸல்) அவர்கள், அச்சிறுவனை முஸ்லிம்களில் ஒருவரிடம் ஒப்படைத்தார்கள். பின்னர் அப்பெண்ணுக்கு இஸ்லாம் கூறியிருக்கும் தண்டனையை நிறைவேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டு தண்டனை நிறைவேற்றப்படும் போது காலித் (ரழி) அவர்கள் அப்பெண்ணுக்கு ஏசினார்கள். காலித் (ரழி) அவர்கள் ஏசியதை நபி (ஸல்) அவர்கள் செவியுற்றபோது, ''காலிதே! நிறுத்துங்கள். என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன் மீதாணையாக! அவர் அழகிய முறையில் பாவமன்னிப்புத் தேடிக்கொண்டார். பொது நிதியை மோசடி செய்த ஒருவன் இப்படி பாவமன்னிப்புக் கோரினால் அவனுக்கும்கூட பாவமன்னிப்பு வழங்கப்பட்டிருக்கும்'' என்று கூறினார்கள். பிறகு அப்பெண்ணுக்கு இறுதித்தொழுகை நடத்த ஏற்பாடு செய்யுமாறு பணித்து, அவருக்காகத் தொழுகை நடத்தினார்கள். பின்னர் அவர் அடக்கமும் செய்யப்பட்டார் (ஹதீஸ், முஸ்லிம்: 3500).

மேற்குறித்த ஹதீஸில் குறித்த பெண் குற்றவியல் குற்றத்தை செய்திருக்கிறார். அதற்காக அவரே ஒப்புதல் வாக்குமூலம் வழங்கினார். இதன் மூலம் ரஜ்முடைய தண்டனை அவருக்கு நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் நபி (ஸல்) அவர்கள் குழந்தை பிறக்கும் வரை பின்னர் பால் குடி மறக்கும் வரை என்று அந்தப் பெண்ணுக்கு சுமார் இரண்டு வருடங்களுக்கு மேல் அவகாசம் அளித்தார்கள். குறித்த பெண்ணின் பிள்ளைக்கு ஓர் உத்தரவாதம் கிடைத்த பின்னரே தண்டனையை நிறைவேற்றினார்கள். மேலும் தண்டனை நிறைவேற்றப்படும் போது மக்கள் குறித்த பெண்ணை கீழ் தரமாக நினைத்தார்கள். குற்றவாளிகளின் மானம், மரியாதை இல்லாமல் ஆக்கப்படுவதே உலக வழமையாக உள்ளது. ஆனால் நபி (ஸல்) அவர்கள் அப்பெண்ணின் சுய மரியாதையையும் சுய கௌரவத்தையும் நிலை நிறுத்தினார்கள். அப்பெண்ணின் சிறப்பை எடுத்துக் கூறினார்கள். இது நபி (ஸல்) அன்னவர்களின் தீர்ப்பின் சிறப்பியல்புகளையும் நீதியின் மகத்துவத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. ஒருநபர் ஒரு குற்றத்தை செய்து அந்தக் குற்றம் நிரூபனமானால் அவருக்கு உடனடியாக தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்று கட்டாயம் இல்லை. தேவை ஏற்படின் காதி குறித்த தண்டனையை பிற்படுத்தி குறித்த நபருக்கு அவகாசம் அளிக்கலாம். மேலும் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்களின் சுய மரியாதையையும் சுய கௌரவத்தையும் காதி பாதுகாக்க வேண்டும்.

e. **சமூகவியல்**

அனஸ் இப்னு மாலிக் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் (ரழி) அவர்கள் மக்காவைத் துறந்து மதீனாவுக்கு எங்களிடம் வந்த போது நபி (ஸல்) அன்னவர்கள் அவர்களுக்கும் ஸஃத் இப்னு ரபீஆ (ரழி) அவர்களுக்கும் இடையில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள் (புகாரி, 3722).

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு வந்த போது அன்னவர்களின் தோழர்களும் அகதிகளாக மதீனாவுக்கு குடிபெயர்ந்தார்கள். இதனால் மதீனாவின் சனத்தொகையும் திடீரென அதிகரித்தது. மேலும் அகதிகளின் வருகையால் மதீனாவில் பாரிய பொருளாதார மற்றும் சமூக நெருக்கடி ஏற்பட்டது. அந்த சமயத்தில் தான் நபி (ஸல்) அவர்கள் மதீனாவின் ஆட்சியைப் பொறுப்பெடுத்து இஸ்லாமிய ஆட்சியை நிலை நிறுத்திக்கொண்டிருந்தார்கள். எனவே முதலாவதாக மஸ்ஜிதுந் நபவியை நிர்மாணித்து பின்னர் அகதிகளின் பிரச்சினைக்கு உலகம் இதுவரை கண்டிராத ஒரு அற்புதமான தீர்வை முன்வைத்தார்கள். சுமார் 90 தோழர்களுக்கு மத்தியில் சகோதரத்துவதை ஏற்படுத்தினார்கள். இதனால் மதீனாவின் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடி நிவர்த்தி செய்யப்பட்டது (Alani & Usama, 2021).

இந்த சகோதரத்துவ இணைப்பின் மூலம் அவர்கள் மத்தியில் இருந்த இனவெறி ஒழிக்கப்பட்டது. நிறம், குலம், இனம் ஆகிய பாகுபாடு இன்றி அனைவரும் சகோதரர்களாக மாறினார்கள். இதனால் விட்டுக்கொடுத்தல், அன்பு, ஒருவருக்கொருவர் ஆறுதல் அளித்தல், பிறருக்கு நன்மை புரிதல் போன்ற நற்பண்புகள் அவர்களுக்கு மத்தியில் பிணைப்பை ஏற்படுத்தி முன்மாதிரி மிக்க சமூகம் ஒன்று உருவாக்கப்பட்டது. இது நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரிமிக்க செயலாகும். மேலும் அவர்கள் சிறந்த தலைமைத்துவத்தையும் வழங்கினார்கள். சமயத்துக்கு மாத்திரமன்றி பொருளாதாரம், சமூகம், அரசியல், கல்வி, நிர்வாகம், சட்டம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் தமது சமூகத்திற்கும் தமது ஆட்சிக்கும் மகத்தான தலைமைத்துவத்தை வழங்கினாரகள் (Weeramantry, 2009). ஒரு காதி ஒரு தீர்ப்பை வழங்கும் போது அத்தீர்ப்பானது மக்களுக்கு மத்தியில் வெறுப்பையும் குரோதத்தையும் ஏற்படுத்தாமல் பரஸ்பரம் சகோதரத்துவத்தையும் பிணைப்பையும் ஏற்படுத்துவதாக இருத்தல் கட்டாயமாகும். இதனால் சிறந்த சமூக கட்டமைப்பை ஏற்படுத்தலாம். அவ்வாறே இஸ்லாம் கூறும் நீதியானது நிறம், மதம் மற்றும் மத வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளாமல் ஒரு முழுமையான தரத்தைப் பெற்றுள்ள அம்சமாகும். அதற்கான அடித்தளம் அல்லாஹ்வின் கட்டளையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தனிநபர்களின் செயல்பாடுகளுக்கு தேவையானவற்றை பூர்த்தி செய்து பாகுபாட்ட நீதியையும் நிலைநாட்டும் போது சமூக நீதி பேணப்படும். ஆரம்பமாக மதீனாவில் நபி (ஸல்) அவர்கள் இந்த சமூக நீதியைத் தான் நிலை நாட்டினார்கள். அதன் மூலம் பலமான ஒரு சமூகம் கட்டியெழுப்பப்பட்டு அக்கால வல்லரசுகளையே தோற்கடிக்கும் ஆற்றலை அச்சமூகம் பெற்றது. இது நீதித்துறையில் சமூக நீதியின் அவசியத்தையும் அதன் பிரதிபலனையும் எடுத்துக்காட்டுகிறது.

## 4. முடிவுரை

நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை அனைத்து தரப்பினருக்குரிய முன்மாதிரிகளைக் கொண்ட வாழ்க்கையாகும். அந்த வகையில் நபி (ஸல்) அவர்கள் குற்றவியல், குடியியல், குடும்பவியல், சமூகவியல் மற்றும் தனிமனித ஒழுக்கம் ஆகிய பகுதிகளில் வழங்கிய நீதித்தீர்ப்புக்களில் ஊடாக நீதிபதிகளுக்கு இருக்க வேண்டிய பண்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. காதியாக செயற்படுபவர் நீதித்துறை பற்றிய அறிவைப் பெற்றிருத்தல், தர்க்க ரீதியிலான சிந்தனைத் தெளிவு, சட்டத்தை அமுல்படுத்துவதில் கடுமையானவராக இருத்தல், தனி மனிதர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், பிற மத சட்டங்களை அறிந்திருத்தல், குடும்ப உறவுகளில் பிணைப்பை ஏற்படுத்தல், பிறரது மானம் மற்றும் கௌரவம் என்பவற்றைப் பாதுகாத்தல், அவகாசமளித்தல், சமூக ஒற்றுமையை ஏற்படுத்துதல் போன்ற முக்கிய பண்புகளை பெற்றிருக்க வேண்டும்.

ஆய்வில் கூறப்பட்ட காதிகளுக்குரிய பண்புகளை நீதிபதிகள் தம் வாழ்வில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் நீதித்துறை செயற்பாட்டில் தம்மை தொழில்முறை ரீதியாக வளர்த்துக்கொள்ள முடியும். மேலும் காழிகளை நியமிக்கும் போது மேற்கூறிய பண்புகள் உள்ளனவா என்பதை பரீட்சித்துப் பார்க்கவும் இஸ்லாமிய நீதத்துறையில் காதி நீதிபதிகளது தரம் பற்றிய புரிதலை ஏற்படுத்தவும் இஸ்லாமிய நீதி பற்றிய தவறான புரிதலைக் களையவும் இவ்வாய்வு உதவும். மேலும் எதிர்காலங்களில் இலங்கை முஸ்லிம் தனியார் சட்ட காதி நீதிமன்ற முறைமையில் மாற்றங்களைக் கொண்டு வரும் பட்சத்தில் காதிகளுக்குரிய பண்புகளைப் வரையறுக்கவும நீதித்துறைசார் கொள்கைகளை உருவாக்கவும் இவ்வாய்வினை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமிய நீதித்துறை தொடர்பான ஏனைய ஆய்வுகளை எதிர்காலங்களில் மேற்கொள்ளவும் இவ்வாய்வு உதவும். இவ்வாய்வில் நபியவர்களின் குறிப்பிட்ட சில தீர்ப்பாயங்கள் மட்டுமே பகுப்பாயப்பட்டுள்ளன. எனவே அதனை மேலும் விரிபுவடுத்தலாம் போன்ற சில பரிந்துரைகளையும் இவ்வாய்வு முன்மொழிகிறது.

**உசாத்துணைகள்**

Alani, Usama. (2021). *Economic and Social Crisis Management Strategies by Prophet Muhammad (PBUH) in Medina. Alsalam Journal of IslAMIC eCONOMY, 1*(2). 195-217.

Ayoob, S. M. (2019). தண்டனைக் கோட்பாடுகள்: சமூகவியல், மெய்யியல், இஸ்லாமியவியல் நோக்கு. *Journal of Modern Tamil Research, 7*(3). 125-131.

Basheer Usmani. (2014, October 15). நீதிக்கு சான்று பகர்வோம். *வெள்ளிமேடை பளஸ்.* https://vellimedaiplus.blogspot.com/2014/10/blog-post_15.html

Baxter, I. F. G. (2022, August 24). family law. *Encyclopedia Britannica*. https://www.britannica.com/topic/family-law

Haniyya, F. C. (2021, May 7). *சர்வதேசச் சட்டமும் உள்நாட்டுச் சட்டமும்.* புதுச் சுடர். https://puthusudar.lk/2021/05/07/article_international-law-and-domestic-law/

Jazeel, M. I. M., & Fowzul, M. B. (2014). *Qualification and behavior of the judge: An Islamic perspective.* Paper presented at the third International Conference of Eastern University on Sustainable Development through Innovations. Eastern University of Sri Lanka.

Jazeel, M. I. M., Fowzul, M. B. (2015). *தீர்ப்பளிக்கும் ஒழுங்கு: ஓர் இஸ்லாமிய பார்வை.* Paper presented at the second International Conference of Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.

Jazeel, M. I. M., Fowzul, M. B. (2019). இலங்கையில் நியமனம் பெறும் காழிகளின் நடத்தைகள்: ஓர் இஸ்லாமிய, கள அனுபவப் பகுப்பாய்வு. *Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 2*(1), 15–30.

Jazeel, M. I. M., Fowzul, M. B. (2018). இலங்கையில் காழிகளின் தகைமைகள்: ஓர் இஸ்லாமிய, கள அனுபவப் பகுப்பாய்வு. *Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 1*(1), 32–51.

Jazeel, M. I. M., Fowzul, M. B., Rakeeza, A. R. F. (2020). The Judgements of Quazi Courts In Sri Lanka: An Analysis. *Muallim Journal of Social Sciences and Humanities, 4*(1), 1-15. https://doi.org/10.33306/mjssh/50

Mazahir, S. M. M., Ashkar, Aroos. (2014). *இஸ்லாமிய ஷரீஆ சட்டம் சாத்தியமும் அவசியமும்.* Dematagoda: Islamic Book House.

Mazahir, S. M. M., Ismiya, R. M. S. (2017). *இஸ்லாம் நம்பிக்கைகளும் கோட்பாடுகளும்.* கொழும்பு: அல்ஹஸனாத்.ஃப் வெளியீட்டகம்.

Nisfa Muzammail. (2021). *முஸ்லிம் சமூகத்தில் அதிகரித்துவரும் விவாகரத்தும் அதற்கான தீர்வாலோசனைகளும்: களுத்துறை பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு.* Paper presented at the eigth International Conference of Faculty of Islamic Studies and Arabic Language on Promoting Faith Based Social Cohesion through Islamic and Arabic Studies. South Eastern University of Sri Lanka.

Qasim, M. I. (2014). Prophet Muhammad’s Strategies On Security And Peace Building: Lessons For The Nigerian Society. *IOSR Journal of Humanities and Social Science*, *19*(11), 18–22. https://doi.org/10.6084/m9.figshare.1243523

Weeramantry, C. G. (1988). *Islamic Jurisprudence, An International Perspective*. London: Macmillan Publishers.

Yoshiko, O. (1986). Muhammad as The Judge: An Examination Of The Specific Quality Of Muhammad's Charismatic Authority. *ORIENT, 22*. 58-72. https://doi.org/10.5356/orient1960.22.58

Zamha, M. M. F., Thariq, M. I. M., Rumana, M. T. F. (2017). *விவாகரத்து இடம் பெறுவதற்கான காரணங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் - களுத்துறை மாவட்ட முஸ்லிம்களை மையப்படுத்திய ஆய்வு.* Paper presented at the fourth International Conference of Faculty of Islamic Studies and Arabic Language on Contemporary Issues in Islamic & Arabic Studies: The Way Forward. South Eastern University of Sri Lanka.